ஆகஸ்டு 2024-இல் தயாரிக்கப்பட்டது
மீளாய்வுத் தேதி: ஆகஸ்டு 2027


# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்

## எளிதில் வாசிப்பதற்கான வளஆதாரம்

இந்த வளஆதாரம் பல மொழிகளில் கிடைக்கிறது. மேலும் தகவல்களுக்கு உங்கள் பேறுகாலச் செவிலியரிடம் கேளுங்கள்

Sussex Local Maternity & Neonatal System

# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்




நீங்கள் கர்ப்பமாக இருப்பதாக எங்களிடம் கூறும்போது உங்கள் பேறுகாலச் செவிலி உங்களைப் பரிசோதனை செய்வார்.

இவை உங்களின் மற்றும் உங்கள் குழந்தையின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்காகும். இவற்றில் இரத்தப் பரிசோதனைகளும் ஸ்கேன்களும் அடங்கும்.



உங்கள் கர்ப்பக் காலத்தில் வெவ்வேறு நேரங்களில் சோதனைகள் நடக்கும்.

இவை எப்போது நடக்கும் என்று உங்கள் பேறுகாலச் செவிலி கூறுவார்.



உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறை ஒரே சோதனை செய்யப்படலாம். இது நீங்களும் உங்கள் குழந்தையும் நலமாக இருக்கிறீர்களா என்பதை அறிவதற்காகும்.

இரத்தப் பரிசோதனை அல்லது ஸ்கேன் செய்துகொள்ள நீங்கள் ஆம் அல்லது இல்லை என்று கூறலாம்.




Sussex Local Maternity & Neonatal System

# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்

## இரத்தப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசிகள்



உங்கள் பொது மருத்துவர் அல்லது பேறுகாலச் செவிலி மூலம் செய்யப்படும் பரிசோதனைகள் இலவசமாகும்.



பின்வருவனவற்றுக்காக இரத்தப் பரிசோதனைகள் செய்யப்படும்:


- அரிவாளணு (Sickle Cell) நோய் மற்றும் தலசீமியா
- இரத்த வகை
- ரீசஸ் நிலைமை
- தொற்றுகள்



Sussex Local Maternity & Neonatal System

# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்


## இரத்தப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசிகள்




அரிவாளணு நோய் என்பது இரத்தம் உடலைச் சுற்றிச் செல்வது கடினமாக இருக்கும் நிலையாகும்.

இரத்தம் சிக்கிக்கொள்ளலாம், இது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஆபத்தானதாக இருக்கலாம்.

உங்களுக்கு அரிவாளணு நோய் இருந்தால் கூடுதல் பரிசோதனைகள் தேவைப்படும்.




உங்கள் இரத்தத்தில் புரதம் உள்ளதா என்பதை ரீசஸ் நிலைமை சரிபார்க்கிறது.


நீங்கள் ரீசஸ் எதிர்மறையாக இருந்தால், உங்கள் குழந்தையைப் பாதுகாப்பாக வைத்திருக்க மற்ற சோதனைகள் தேவைப்படும்.



Sussex Local Maternity & Neonatal System


# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்

## இரத்தப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசிகள்



நோய்த்தொற்றுகளில் ஹெபடைடிஸ் B, சிபிலிஸ் மற்றும் எச்ஐவி ஆகியவை அடங்கும்.

உங்களுக்கு நோய்த்தொற்று இருந்தால், உங்கள் பராமரிப்புக் குழு உங்களுக்குச் சிகிச்சை அளிக்கும். உங்கள் சிகிச்சைத் தேர்வுகள் பற்றிய கேள்விகளை நீங்கள் கேட்கலாம்.



தடுப்பூசிகள் உங்களையும் உங்கள் குழந்தையையும் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும்.

உங்களுக்கு என்னென்ன தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன என்பதை உங்கள் பராமரிப்புக் குழு சரிபார்க்கும்.


உங்களையும் உங்கள் குழந்தையையும் பாதுகாக்க தடுப்பூசி போட்டுக்கொள்ள விரும்புகிறீர்களா என்று அவர்கள் கேட்பார்கள்.



Sussex Local Maternity & Neonatal System


# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்

## ஸ்கேன்கள்



நீங்கள் ஸ்கேன் செய்துகொள்வதற்கு வெவ்வேறு காரணங்கள் உள்ளன. ஆரம்பகால கர்ப்ப ஸ்கேன் சரிபார்ப்புகள்:

- உங்கள் குழந்தையின் அளவு
- இதயத்துடிப்பு
- உங்கள் குழந்தை எங்குள்ளது
- உங்க வயிற்றில் எத்தனை குழந்தைகள் உள்ளன
- உங்கள் குழந்தை நன்றாக வளர்கிறதா



நுகல் டிரான்ஸ்லுசென்சி ஸ்கேன் (Nuchal Translucency, NT) உங்கள் குழந்தையின் கழுத்தின் பின்பகுதியில் உள்ள இடத்தை ஆராய்கிறது. இது பின்வருனவற்றுக்காகப் பரிசோதிக்கிறது:


- மனநலிவுக் குறைபாடு (டவுன்'ஸ் சிண்ட்ரோம்)
- எட்வர்ட்'ஸ் சிண்ட்ரோம்
- பட்டௌ'ஸ் சிண்ட்ரோம்



Sussex Local Maternity & Neonatal System

# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்

## ஸ்கேன்கள்




இந்தச் சோதனைகளுக்கு முன் நீங்கள் ஏதாவது செய்ய வேண்டுமா என்று உங்கள் பேறுகாலச் செவிலி உங்களுக்குச் சொல்வார்.

உங்களின் பேறுகாலச் செவிலியிடம் நீங்கள் கேள்விகளைக் கேட்கலாம்.



அனைத்து சோதனைகளும் பயிற்சி பெற்ற நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

முடிவுகளையும், அடுத்து என்ன நடக்கும் என்பதையும் புரிந்துகொள்ள அவர்களால் உங்களுக்கு ஆதரவளிக்க முடியும்.

உங்கள் பராமரிப்பைப் பற்றி முடிவெடுக்க உங்களுக்கு உரிமை உள்ளது.



Sussex Local Maternity & Neonatal System

# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்



சிலநேரங்களில் உங்கள் கர்ப்பக் காலத்தில் உங்களுக்குக் கூடுதல் உதவி தேவைப்படலாம். நீங்கள் ஏதேனும் குறித்து கவலைப்பட்டால், உங்களின் பராமரிப்புக் குழுவிடம் பேசுங்கள்.

இது உங்களையும் உங்கள் குழந்தையையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளத் திட்டமிடுவதற்கு உதவும்.




பேறுகாலச் செவிலியை எப்போது அழைக்க வேண்டும் என்பதை அறிய, கீழேயுள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும்.


உங்களிடம் இணைய இணைப்பு இல்லையென்றால், உங்கள் பேறுகாலச் செவிலியிடம் ஒரு நகலை அச்சிட்டுத் தருமாறு கேட்கவும்.

[tommys.org/pregnancy-information/health-professionals/free-pregnancy-resources/poster-when-call-midwife](tommys.org/pregnancy-information/health-professionals/free-pregnancy-resources/poster-when-call-midwife)



Sussex Local Maternity & Neonatal System

# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்





உங்கள் கர்ப்பக் காலத்தில் உங்கள் பேறுகாலச் செவிலியை நீங்கள் அழைக்க வேண்டியிருக்கலாம். கீழே உள்ள எண்களில் ஒன்றைப் பயன்படுத்தி நீங்கள் அவரை அழைக்கலாம். உங்கள் பேறுகாலச் செவிலி எந்த மருத்துவமனையில் வேலை செய்கிறார் என்று உங்களுக்குத் தெரியாவிட்டால் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

- கன்குவெஸ்ட் மருத்துவமனை (Conquest Hospital), செயிண்ட் லியோனார்ட்ஸ்
  0300 131 4500

- ஈஸ்ட்போர்ன் மாவட்டப் பொது மருத்துவமனை (Eastbourne District General Hospital)
  0300 131 4500

- ராயல் சசெக்ஸ் கவுண்டி மருத்துவமனை (Royal Sussex County Hospital), பிரைட்டன்
  01273 696955

- பிரின்சஸ் ராயல் மருத்துவமனை (Princess Royal Hospital), ஹேவர்ட்ஸ் ஹீத்
  01444 441881

- செயின்ட் ரிச்சர்ட்ஸ் மருத்துவமனை (St Richard’s Hospital), சிசெஸ்டர்
  01243 788122

- வொர்திங் மருத்துவமனை (Worthing Hospital)
  01903 205111

- கிழக்கு சர்ரே மருத்துவமனை (East Surrey Hospital)
  01737 768511



Sussex
Local Maternity & Neonatal System

# முதல் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன்கள்

**கர்ப்பக் காலத்தில் உங்களுக்கு ஆதரவளிப்பதற்கான கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து பார்க்கவும்:**

கர்ப்பம்-தொடர்பான நிலைமைகள் - NHS
nhs.uk/pregnancy/related-conditions

கர்ப்பக் காலத்தில் தடுப்பூசி செலுத்தல்கல் - டாமி'ஸ்
tommys.org/pregnancy-information/im-pregnant/antenatal-care/vaccinations-pregnancy

கர்ப்பக் காலத்தில் எனக்கு என்ன பரிசோதனைகள் செய்யப்படும் - டாமி'ஸ்
tommys.org/pregnancy-information/im-pregnant/antenatal-care/what-tests-will-i-have-during-pregnancy

தேசிய FGM ஆதரவு மருத்துவகங்கள் (National FGM support clinics) - NHS
nhs.uk/conditions/female-genital-mutilation-fgm/national-fgm-support-clinics

உங்களிடம் இணைய இணைப்பு இல்லையென்றால், உங்கள் பேறுகாலச் செவிலியிடம் மேலேயுள்ள ஏதேனும் இணைப்புகளில் இருந்து உங்கள் தகவல்களை அச்சிட்டுத் தருமாறு நீங்கள் கேட்கலாம்.



Sussex
Local Maternity & Neonatal System